# Chezhumai செழுமை

# TIST India

## Happy Pongal / பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## TIST Women members celebrating New Year 2009




T I S T F a r m e r s H e l p W o r l d w i d e P r o b l e m

**The International Small Group & Tree Planting Program**

TIST India: 19/8, Lake View Road, Kottur, Chennai 600 085, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org

## HELPLINE

For any information or help
Dial 9003020836 / 9003020837

If you have any difficulty in
TIST Program dial 9840299822

Our landline: +91 44 42188438

Our email: josephrexon@tist.org

Our address: 19/8, Lake View Road, Kottur, Chennai 600085

## தொழில் முறை உதவி

எந்த தகவல் அல்லது உதவிக்கு
**9003020836 / 9003020837** ஐ டயல் செய்யவும்.

டி.ஐ.எஸ் டி திட்டத்தில் உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால்
**9840299822** ஐ டயல் செய்யவும்

ஏங்களது தொலைபேசி
+91 44 42188438

எங்களது மின் அஞ்சல் (ஈ–மெயில்)
josephrexon@tist.org

எங்களது விலாசம்
**19/8**, ஏரிக்கரைச் சாலை, கோட்டூர்
சென்னை **600085**.



## What to do with the naturally fallen and trimmed leaves?

Most of them burn the naturally fallen and trimmed leaves. This is as good as not growing trees. Leaves works continuously to sequester the carbon. When we burn the naturally fallen and trimmed leaves of trees, the carbon content in the atmosphere gets added and puts us behind in healing the atmosphere. The one and only best practice is to put those leaves all around the base of the tree. Fallen leaves are one of the most concentrated sources of nutrients available, carrying 50 to 80 percent of the nutrients that a tree extracts from the soil and air. Fresh grass and plant trimmings are a rich source of nitrogen. These leaves get mixed with the soil and form natural manure, which is very good for the tree.

## இயற்கையாக உதிரும் இலைகள் மற்றும் தரிக்கப்பட்ட இலைகளை கொண்டு என்ன செய்யலாம் ?

இவ்வாறு கீழே உதிரும் இலைகளை பலர் எரித்து விடுகின்றனர். இவ்வாறு செய்வதற்கு மரங்களை வளர்க்காமலேயே இருக்கலாம். இலைகள் தொடர்ந்து செயல்பட்டு கார்பன் உற்பத்திக்கு உதவுகிறது. நாம் இலைகளை எரிப்பதினால், சுற்று சூழலில் உள்ள கார்பனின் அளவை அதிகரிப்பதுடன், நாம் சுற்று சூழலை சுத்திகரிப்பதிலிருந்து பின் தங்க செய்கிறது. கீழே விழும் இலைகளை சேர்த்து மரங்களின் அடியில் சுற்றி போட்டுவிடுவது சிறந்த செயலாகும். இவ்வாறு செய்தால் இலைகளின் உள்ள சத்து பொருட்கள் மரங்களை சென்று அடைவதோடு, மரங்களும் இதிலிருந்து 50 முதல் 80 சதவிகிதம் வரை சத்து பொருட்களை பூமியிலிருந்தும், காற்றிலிருந்தும் கிடைக்ககூடிய அளவில் தக்க வைத்துக்கொள்கிறது. புதியதாக வளரும் புற்கள் மற்றும் கத்தரித்த செடியின் கிளைகள், நைட்ரஜன் உற்பத்திக்கு மிக சிறந்த மூலாதாரமாகும். இந்த இலைகள் மண்ணோடு மண்ணாக கலந்து மிக சிறந்த இயற்கை உரமாக மாறுகிறது. இது மரங்களுக்கு சிறந்த உரமாகும்.

## New Year Celebration at Katchur

TIST organized the new celebration at Katchur village. Several members, particularly several women member participated in the celebration. Women members joined together and welcomed the New Year 2009 by cutting a cake and shared the cake with all the members. There was a question & answer time to reward the members.

## கச்சூரில் நடைபெற்ற புத்தாண்டு விழா

TIST கச்சூர் கிராமத்தில் புத்தாண்டு விழாவினை ஒருங்கிணைத்தது. அவற்றில் அதிகமாக TIST உறுப்பினர்கள், குறிப்பாக பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அனைத்து பெண் உறுப்பினர்களும் திரலாக ஒன்று சேர்ந்து கேக் வெட்டி அவற்றை அனைவருக்கும் பகிர்ந்தளித்து 2009 புத்தாண்டினை வரவேற்றனர். பிறகு உறுப்பினர்களுக்கு பரிசளிக்க கேள்வி பதில் நேரம் ஒதுக்கப்பட்டது









TIST Program Director put a question to the members to find their involvement in TIST Program. Question: What does TIST sell to get money to run the program? Sulochana of Poals Green Small Group gave the correct answer. Answer: Carbon which is stored in the tree. Yes it the carbon which is sequestered in the trees are calculated and the calculation is sold. Thousand kg of carbon is known as one credit. Sulochana was awarded with a gift. Not only Sulochana, all the members who attended the celebration knew the answer, but Sulochana was the first person to answer it.

The celebration went on well. Several groups who had trees less than 1000 promised to plant more than 1000 trees during 2009.

TIST திட்ட இயக்குனர் TIST உறுப்பினர்களின் ஆர்வத்தினை கண்டு ஒரு கேள்வியினை முன் வைத்தார், கேள்வி - TIST திட்டத்தில் எந்த பொருளை வியாபாரம் செய்து பணமாக்கி திட்டத்தை நடத்துகிறது? போல்ஸ் கீரின் குழுவை சேர்ந்த திருமதி சுலோச்சனா என்பவர் சரியான பதிலை அளித்தார், மரத்தில் சேமிக்கப்பட்டுள்ள கார்பனையே TIST வியாபாரம் செய்கிறது. ஆமாம் மரங்களிலுள்ள கார்பன் கணக்கெடுக்கப்பட்டு அந்த கணக்கீட்டினை வியாபாரம் செய்கிறது. ஆயிரம் கிலோ கிராம் கார்பன் என்பது ஒரு கிரிடிட் ஆகும். திருமதி சுலோச்சனாவ,க்கு பரிசளிக்கப்பட்டது. சுலோச்சனா மட்டுமல்லாமல் ,அனைத்து உறுப்பினர்களும் இந்த பதிலை தெரிந்துள்ளார்கள். அவற்றில் முதலில் பதிலளத்தது திருமதி சுலோச்சனா ஆவார்.

விழா நல்ல முறையில் நடைபெற்றது 1000க்கும் குறைந்த மரங்கள் நடவு செய்துள்ள சிறுகுழு உறுப்பினர்கள் கட்டாயமாக 2009ல் 1000க்கும் மேற்பட்ட மரங்களை நடவு செய்வோம் என உறுதியளித்தனர்



## Tree care during dry season

It is very good that several members have planted new trees during July to December 2008. A healthy tree increases in value with age. For farmer in current scenario, it is very difficult to save money every month for future, but you all have planted trees in TIST Program, which will definitely help you now and in future too. Providing good care to your trees, particularly during summer is like depositing money in the bank. Visit your tree groves every day and have a constant watch over your trees and soil.

## வெயில் காலங்களில் மரங்களின் பராமரிப்பு

ஜீலை டிசம்பர் மாத காலங்களில் அதிக உறுப்பினர்கள் மரங்களை நடவு செய்துள்ளது மிக நல்லது. நல்ல ஆரோகியமான முறையில் மரங்களை வளர்ப்பதினால் ஆம்மரங்கள் நாளடைவில் நன்கு வளர்ந்து நல்ல லாபத்தை பெற்று தரும். இப்போது உள்ள விவசாயிகளின் நிலையில் எதிர்காலத்திற்கு பணம் சேமிப்பது என்பது ஒரு இக்கட்டான நிலையாக உள்ளது. ஆனால் TIST திட்டத்தில் சேர்ந்து மரங்களை நடுவதன் மூலம் உங்களுக்கு நிச்சயமாக தற்போதும், எதிர்காலத்திலும் உதவியாக இருக்கும். உங்கள் மரங்களை நல்ல கவனம் செலுத்தி பராமரிப்பது குறிப்பாக வெயில் காலங்களில் பராமரிப்பது உங்கள் பணத்தை வங்கியில் சேமிப்பதை போன்றதாகும் தினமும் உங்கள் தோப்பினை நினைத்த முறையில் அதாவது மரங்களையும், மண்ணையும் பராமரிக்க வேண்டும்




Member taking care of their Kumil tree grove - removing the weeds
உறுப்பினர் குமிழ் மர தோப்பில் – களையெடுத்தல்

We have a mighty task before us. The earth needs our assistance - Plant Trees
நம் முன்னே மிகப்பெரிய கடமை ஒன்று உள்ளது. பூமி நம் உதவியை நாடுகிறது. நிறைய மரங்களை வளர்க்க வேண்டும்.

## Manure

Manure is organic matter used as organic fertilizer in agriculture and tree cultivation too. Manures contribute to the fertility of the soil by adding organic matter and nutrients. Use of manure effectively will keep your tree healthy.

## Mulching & Watering

Do not burn your agricultural waste, this will generate heat in the atmosphere. Instead use the agriculture waste as mulch in tree groves. This will keep the temperature little low in the ground below. Moreover, the available little water does not gets evaporated into the atmosphere. If large amount of water is not available, try to implement drip irrigation wherein with little water several trees can be watered. All TIST members are organized in groups to help each other in need. If you have water in your well or farm pond try to help your other member of your group with water.



Goat manure collected by members at Narmapallam Village
நர்மாபள்ளம் கிராமத்தில் உறுப்பினர்களால் சேகரிக்கப்பட்ட ஆட்டு உரம்

## உரப் பயன்பாடு

உரம் என்று இங்கே நாம் குறிப்பிடுவது, இயற்கையான ஒரு கரிமப் பொருள் இயற்கை உரமாக விவசாயத்திற்கும், மர வளர்ப்பிற்கு பயன்படுத்துவதாகும். இந்த உரத்திலுள்ள கரிமப்பொருள் மற்றும் சத்துக்கள் மண்ணின் வளத்தை மேம்படுத்துகிறது. இயற்கை உரங்களை பயன்படுத்துவதால் உங்கள் மரப்பயிர்கள் வளமாக காணப்படும்.

## மண்ணின் ஈரம் காக்கும் முறை மற்றும் நீர் பாசனமுறை

விவசாயக் கழிவுபொருட்களை எரிக்காதீர்கள் அது வளிமண்டலத்தை வெப்பமடையச்செய்யும் அந்த சமயம் அவற்றை தோப்புகளில் மரங்களை சுற்றி பரப்பி மண்ணின் ஈரம் காக்க பயன்படுத்துங்கள் இவ்வாறு செய்வதால் நிலத்தடி வெப்பத்தை கொஞ்சம் குறைக்கும் மேலும் நிலத்திலுள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்கு செல்வது குறைகிறது நீங்கள் பயன்படுத்தும் நீர்பாசன முழுமையாக மரங்களுக்கு சேரும். அதிக நீர்பாசன வசதியில்லாத இடங்களில் சொட்டு நீர் பாசன முறையினை கையாளுங்கள் அந்த இடங்களில் குறைந்த நீரில் அதிக மரங்கள் பாசன வசதி பெறும். அனைத்து TIST உறுப்பினர்களும் குழுவாக சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவும்

நீங்கள் உங்கள் கிணறு அல்லது பண்ணை குட்டைகள் மூலம் உங்கள் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதாக இருந்தால் அருகாமையிலுள்ள உங்கள் குழு உறுப்பினருக்கும் பாசனத்திற்கு உதவுங்கள்.



## Pruning & Weeding

Pruning is the most common tree maintenance procedure next to watering. Pruning is often desirable or necessary to remove dead, diseased, or insect-infested branches and to improve tree structure.

Weeding is more important to utilize your water and manure effectively for your trees and intercrops. The wild weeds if left unnoticed will come into conflict with the trees and intercrops. Regular weeding is important to get good yield in the intercropping and growing a healthy tree.

## கவாத்து செய்தல் மற்றும் களை நிர்வாகம்

நீர்பாசனத்திற்கு அடுத்த மரப்பராமரிப்பிலுள்ள ஒரு முக்கிய செயல் கவாத்து செய்வதாகும் கவாத்து செய்வது என்பது தேவையான விருப்பத்தக்க செயல் அதாவது, மரத்திலுள்ள வேண்டாத, குறுக்கும் நெடுக்குமாகவும், காய்ந்தும், பூச்சிகள் மற்றும் நோய்களால் தாக்கப்பட்டும் கிளைகளை கழித்து மரத்தில் எல்லா கிளைகளிலும் நன்கு சூரிய ஒளி படும்படி அதன் அமைப்பு இருக்கும் படி செய்ய வேண்டும்.

உங்கள் மரங்களுக்கும் ஊடுபயிர்களுக்கும் பயன்படுத்தும் நீரையும், உரத்தையும் சரியான முறையில் பயன்படுத்தி கொள்ள களையெடுத்தல் பராமரிப்பில் ஒரு முக்கிய அம்சமாகும். அதிக வலுவுள்ள களைகள் நமக்கு தெரியாமல் வளர்ந்து வந்தால் அவை மரங்களுக்கு எல்லாவகையிலும் எதிராக இருக்கும். தொடர்ந்து களையெடுப்பதால் ஊடுபயிர்கள் அதிக விளைச்சல் பெறுவதோடு மட்டுமல்லாமல் மரமும் வளமாக இருக்கும்.




Mr.M.Kalidoss, Ranger of Vellore II Range demonstrating to the members on, "how to trim leaves and unwanted side branches in teak tree".
திரு. M. காளிதாஸ் (வனச்சரகர் வேலூர் II) சில உறுப்பினர்களுக்கு தேக்கு மரக்கன்றுகளின் இலைகள் மற்றும் பக்ககிளைகள் எவ்வாறு வெட்டி எடுத்து நன்றாக பராமரிப்பது என்று விளக்கினார்.

## டிஜஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஜஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஜஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஜஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஜஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஜஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஜஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஜஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்ளும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.